தமிழ்ப் பல்கலைக் கழகச்
# செய்தி மலர்

மலர் - 5. திருவள்ளுவராண்டு - 2017 - சித்திரை - 1 14-4-1986

## டாக்டர் ராசா ராமண்ணா வருகை

இந்திய அணுசக்திக் கமிசன் தலைவரான டாக்டர் ராசா ராமண்ணா தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு 9.4.'86 அன்று வருகை தந்தார். பல்கலைக் கழகத்தைச் சுற்றிப் பார்வையிட்ட அவர், பல்கலைக் கழகத்தின் அறிவியல் முயற்சிகளைப் பாராட்டினார். அன்று பல்கலைக் கழகப் பேராசிரியர், ஆய்வாளர் கூட்டத்தில் சொற்பொழிவாற்றியபோது, பண்டைய தத்துவங்களில் பொதிந்துள்ள அறிவியல் உண்மைகளை விளக்கினார்.



தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வெளியீடான 'தாய்லாந்துக் கலாச்சாரத்தில் திராவிடத்தின் தாக்கம்' என்ற ஆங்கில நூலைத் துணைவேந்தரவர்கள் வெளியிட்டார். முதல் படியை டாக்டர் ராசா ராமண்ணா பெற்றுக் கொண்டார்.

## நூல் அறிமுகங்கள்

சென்னை அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் இயற்றிய 'அறிவியல் தமிழ்' எனும் நூலை 5.4.'86 காலை 9.30 மணியளவில் தமிழ்ப் பல்கலைக் கழக அரண்மனை வளாகக் கருத்தரங்கு அறையில் பல அறிஞர் பெருமக்கள் சீர்தூக்கினார்கள்.

அவ்வமயம், அறிவியல் தமிழை ஊக்குவிக்கப் பல ஆக்க பூர்வமான கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன.

நூலாசிரியர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களும் வந்திருந்து சிறப்பித்தார்கள்.



கருத்தரங்கின் இறுதியில் கொங்கு நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட அரசர்கள் பற்றிய 'செழியதரையன் பிரபந்தங்கள்' என்ற நூலைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டார்கள். இந்நூலின் முதல் படியை அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மைய அரசின் கல்வி, பண்பாட்டுத் துறையின் நல்கையில் உருவான இந்நூல் ஏறத்தாழ 638 பக்க அளவு கொண்டது.

## கீழ்த்திசை மாநாடு
### 33-ஆவது ஆண்டுக்கூட்டம் - பொதுத் தலைவர் தேர்வு

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களைக் கல்கத்தாவில் 1986 அக்டோபர் 24 முதல் 26 வரை நடைபெறும் அகில இந்தியக் கீழ்த்திசை மாநாட்டின் பொதுத் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளனர். 1951-இல் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியும் 1965-இல் டாக்டர் வி. இராகவனும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் ஏறத்தாழ இருபதாண்டுகள் கழித்து இப்போது தென்னக ஆய்வாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## இசை ஆய்வு விரிவுரைகள்

காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் இசை ஆய்வுத் துறைப் பேராசிரியரும் பல்கலைக் கழக நல்கைக்குழு அமர்த்தியுள்ள தேசியஇசை விரிவுரையாளருமான முனைவர் ரங்கநாயகி அய்யங்கார் அவர்கள், ஏப்ரல் 10,11 ஆகிய இரு நாள்களிலும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

முதல் நாள் சப்பான், கொரியா ஆகிய நாடுகளின் இசை வளர்ச்சியில் சீன தேசத்துத் தொண்டு பற்றிய விரிவுரையில் சீன நாட்டு இசைக்கருவிகள் இரும்பு, மூங்கில் போன்ற எட்டுவிதமான பொருட்களினால் செய்யப் பட்டுள்ளன என்று தெரிவித்தார். ஒலிப்பதிவு செய்யப்பட்ட சீனா, சப்பான், கொரியா நாடுகளின் கருவிஇசைகள், ஒலிபரப்பப்பட்டன. கொரிய நாட்டு இசை, கமகம் முதலிய இயல்புகளில் இந்திய இசையை ஒத்திருப்பதாகக் குறிப்பிட்ட முனைவர் ரங்கநாயகி, கொரியா, சப்பான் ஆகிய நாடுகளில் வழங்கும் தாளங்கள் மூன்று, நான்கு ஆகிய எண்ணிக்கை கொண்ட எளிய நடையில் அமைந்திருப்ப தாகக் கூறினர்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த இசைத் துறைப் பேராசிரியர் து.ஆ. தனபாண்டியன் அவர்கள், 'பழந் தமிழ் மக்கள் இசைக் கலையில் எவ்வாறு தேர்ச்சிபெற்று விளங்கினர்' என்று விளக்கினார்.

முன்னதாக, இசைத் துறையில் சிறப்புநிலை ஆய்வாள ராகப் பணியாற்றிவரும் முனைவர் பி.எஸ்.. லோசசன் வரவேற்றார். இசைத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றும் திருமதி ஞானா குலேந்திரன் அவர்கள் நன்றி கூறினர்.

11.4.'86 அன்று, "ஐரோப்பிய இசையில் தொகுப்பிசையின் (Polyphony) தொடக்கமும், தனியிசை (Monophony) -யிலிருந்து தொகுப்பிசைக்கு ஏற்பட்ட மாற்றமும்" என்பதுபற்றி முனைவர் ரங்கநாயகி அய்யங்கார் அவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள். ஐரோப்பிய நாடுகளில் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் தனியிசை மட்டும் வழக்கில் இருந்தது என்றும், அதன் பின்பு, படிப்படியாகத் தொகுப்பிசை அறிமுகப்படுத்தப் பட்டதென்றும் தெரிவித்தார். கிரிகோரியன் வேத இசை, மற்றும் லத்தீன், பிரெஞ்சு மொழிகளில் அமைந்த ஆலய வழிபாட்டு இசை ஆகியவற்றின் ஒலிப்பதிவு, ஒலிபரப்பப் பட்டது.

தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியில் நரம்பியல் வல்லுநராகப் பணியாற்றுபவரும், ஐரோப்பிய இசையில் தேர்ச்சி பெற்றவருமான டாக்டர் பி.ஏ.பாஸ்கர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், இசை மருத்துவத்தின் மூலமாக, மூளை மற்றும் நரம்பியல் நோய்கள் குணமாக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்.

முன்னதாக இசைத்துறையில் இளநிலை ஆய்வாளராகப் பணியாற்றும் திரு ஜான் பிரிட்டோ, வரவேற்றார். இசைத் துறைப் பேராசிரியர் து.ஆ. தனபாண்டியன் அவர்கள் இரண்டுநாள் நிகழ்ச்சிகளுக்கும் வருகைதந்த அனைவர்க்கும் நன்றி கூறினர்.

## சிறிய உயிரியின் பெரிய பயன்கள்

ஆர்டிமியா (Artemia) என்னும் 1 சென்டிமீட்டர் வரை வளரும் உயிரினம், உப்பளங்களில் கூட்டம்கூட்டமாக வாழ்கின்றது. உப்பளங்களில் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கும் தாவர இனத்தை உண்டு வாழும் இந்த உயிரி உப்பைச்சுத்தமாக்கவும், அதன் எடை கூடுதலாக அமைய வும் முக்கிய காரணமாகின்றது. இதன் வயது 6 மாதங்கள். முட்டையிலிருந்து பருவமடைய 21 நாள்கள்ஆகின்றன. பருவ மடைந்த நாள்களிலிருந்து, 3 அல்லது 4 நாள்களுக்கு ஒரு முறை 100-300 முட்டைகள்இடுகின்றன. இம் முட்டைகளை பாலிதின்பைகளில் 2 ஆண்டுகள்வரை வைத்துப் பாதுகாக்க முடியும். இம் முட்டைகளைச் சற்று உப்பு கலந்த நீரில் விட்டால், பொரிந்து குஞ்சுகள் வெளியாகின்றன. இந்த 'ஆர்டிமியா' குஞ்சுகள் 1. இறால், மீன் போன்றவை களுக்கு உணவாக அமைகின்றன. 2. ஒரு கிலோகிராம் ஆர்டிமியா முட்டைகள் உரு.700/-வரை விலை போகின் றன; நாட்டில் பொருளாதாரம் ஏற்பட வசதிஉண்டாகும். 3. கோழிகளுக்கு நல்ல தீவனமாக அமைகின்றது; இதனால், அவை இடும் முட்டைகள் நல்ல மஞ்சள் கரு உண்டாக வாய்ப்பு உண்டாகிறது. 4. ஆர்டிமியா உயிரினத்தைக் கொண்டு, மீனின் நோயைக் குணப்படுத்த முடியும். 5. மற்றும் தூய்மையற்ற நீரைச் சுத்தமான நீராக ஆக்க இது உதவுகின்றது.

இதைப் பற்றிய ஆராய்ச்சியை, வேதாரணியம் உப்பளத்தில் மேற்கொண்டு வருகின்றேன்.

முனைவர் அ. அப்துல் ரகுமான்,
விலங்கியல் துறைத் தலைவர்,
ஸ்ரீ புட்பம் கல்லூரி, பூண்டி.

மேற்குக் கடற்கரையோரத்தில் கால் வைத்த வாஸ்கோடாகாமாவின் கப்பலை ஒரு முசுலீம் ஓட்டினார் என்று சில வரலாற்றாசிரியர்கள் வற்புறுத்துகின்றனர். வாஸ்கோடாகாமா போர்த்து கீசு மொழியறிந்தவர். கோழிக்கோட்டு சாமுத்திரி மலையாளம் அறிந்தவர். இவர்கள் இருவருக்குமிடையே மொழித்தொடர்பு ஏற்படுத்தியவர் அரபி தெரிந்த முசல்மான் என்பர்.
மணிமேகலைக்கதை காண்டாவியூகத்திலிருந்து எடுக்கப் பட்டது.

சப்பானிய ஆய்வாளர்,
தியான புத்தமதக் கருத்தரங்கு,
காஞ்சி மையம்.

## சங்கீத நாடகம்

பழைய மரபு அழிந்துவிட்டது, அழிந்து வருகிறது என்று கூறுபவர்கள் வேணுகோபால கர்நாடக சங்கீத சபாவின் ருக்மாங்கதன் என்ற இரண்டு நாள் சங்கீத நாடகத்தைப் பார்க்க வேண்டும்.

நெசவுத் தொழிலாளர்கள் தாமேகூடி, பொருளிட்டு, மரபு மறவாமல் இவ்வாண்டு நடத்தியுள்ளனர். நடிகர்கள் அனைவரும் ஆண்கள். சௌராட்ர மொழி பேசுவோர். நாடகம் முழுவதும் தமிழ்ப் பாடல்கள்தாம். உரையாடல் மிகக் குறைவு. நடிப்பும் மிகக் குறைவு. ஆனால், தாளம் தப்பாமல் இசைமழையில் காண்பவர்களை மெய்மறக்க வைக்கின்றனர். தெருக்கூத்தைப் போன்று நடையாட்டமும், நடன அமைப்பும் இதிற் கலந்துள்ளன. மரபுக் கதை, மரபு நடிப்பு, சுத்தமான தமிழிசை, தெய்வவுணர்வோடு ஆசிரியர் வழி சட்டாம்பிள்ளையின் மேற்பார்வையில் இந்த நாடகம் நடிக்கப்பட்டது. (30,31.3.'86).

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக நடத்தவில்லையாம். இப்போது மரபு மீண்டும் தளிர்விட்டுள்ளது.

உறவினர் ஒவ்வொரு நடிகருக்கும் மொய் எழுதுவர் (பரிசு வழங்குவர்). இதுதான் வருமானம். நடித்தோம் என்ற மகிழ்ச்சி நடிகருக்கு.

தஞ்சையில் அங்கங்கே நடக்கும் நாடகமுறைநாட்டுக் கலைகளை இணைத்தற்கு உதவும்.

## பன்னாட்டு, புத்தசமயக் கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக் கழகக் காஞ்சி தத்துவமையத்தில் பல்கலைக் கழக மானியக் குழுவின் ஆதரவில் 1986 மார்ச்சுத் திங்கள் 10ஆம் நாளிலிருந்து 16ஆம் நாள் வரை ஒரு வாரம் பன்னாட்டுத் தியான/சான்/சென்/தந்திரவாதம் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கைத் தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு செ.அரங்கநாயகம் அவர்கள் துவக்கிவைத்துச் சிறப்பித்தார்கள்.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அயல்நாடுகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் பலர் இக்கருத்தரங்கில் பங்கேற்றுத் தியானம் மற்றும் தந்திரவாத பௌத்தம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார்கள்.

இக் கருத்தரங்கம் இந்தியாவிலேயே தியானம் தந்திரவாத பௌத்தம் பற்றிய முதல் கருத்தரங்காகும்.

கப்பலோட்டம்பற்றிய பல அராபிய டர்க்கீசு ஆவணங்கள் சோழர்கள், குசராத்தியரின் கப்பல் மரபைக் கூறுகின்றன.

நிஸ்டாட்சு நிறுவனக் குறிப்பு,
புதுதில்லி.

## பண்பாட்டுப் பன்மை நாட்டுக்கு வலுவூட்டும்

"ஒரே ஒரு பண்பாட்டைத் தோற்றுவித்தால் இந்தியா வலுப்பெற்றுச் சிறக்காது. ஒவ்வொரு பண்பாடும் தனித்தனியாக வளர்வதில் நமது வலுநிலை உருவாகின்றது. அவை ஒவ்வொன்றும் மேலும்மேலும் உயர்வு பெற்றுத் தம்முள் இணைந்துறவாடி, பண்பாட்டில் சிகரநிலையை இந்திய நாடு அடைய வேண்டும். இதுவே இன்று நாம் நேரிடும் அறைகூவல். இந்திய நாட்டின் ஒவ்வொரு பகுதியும்தமது விருப்பத்திற்கேற்பத் தத்தம் பண்பாட்டை வளர்த்து, மரபைக் காத்து அறிவியல், கருவியியல் ஆகியவற்றின் முன்னேற்றத்துடன் இணைந்து நடைபோடுமாறு செய்வதே நம் குறிக்கோள்!"

– இராசீவ் காந்தி,
பன்னாட்டுக் கன்னட மாநாட்டு உரை.

## சிறந்த நூல்களுக்கான பரிசுகள்

புத்தம்புதிய துறைகளில் தமிழ் வளம்பெறும் பொருட்டும், தமிழ்ப் பண்பாடு, இலக்கியம் பற்றிய செய்திகளை உலகமொழியிற் படைத்தலை ஊக்குவித்தற்கும் 1985–86ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழா 22.3.'86 காலை 10 மணியளவில் தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

பரிசுத் தொகையினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்அவர்கள் நூலாசிரியர்களுக்கு வழங்கினார்கள். இவ் விழாவில் பேரவைக் குழு மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வீரமாமுனிவர் செய்த சதுரகராதி 1848–49இல் வெளியிடப்பட்டு, கேசவ முதலியாரவர்களால் பதிப்பிக்கப்பட்ட அரிய நூலின் படியொன்று நூலகத்தில் பெறப்பட்டிருக்கிறது.

த.பத்மநாபன்,
நூலகம்.

## நாகபாசத்தார்

அண்மையில்கிடைத்த இரண்டு செப்பேடுகளில் கோயில் கலைஞர்கள் அனைவருக்கும் உரிய பொதுப் பெயராக நாகபாசத்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு செப்பேடு கோவை மாவட்டம் திருமுருகன் பூண்டியைச் சேர்ந்தது. மற்றொரு செப்பேடு கும்பகோணம் நாகேசுவரன் கோயிலில் உள்ளது. எனவே தமிழ்நாடு முழுவதிலும் கோயில் கலைஞர்கள் நாகபாசத்தார் என்று அழைக்கப்பட்டனர்.

– செ.இராசு,
கல்வெட்டியல் துறை.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

**செய்தி மலர்**

திங்களிதழ்

பதிவெண் 15033/88X7

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

40) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

## நூல்கள் அன்பளிப்பு

மன்னார்குடி கே.எஸ். சீனிவாச முதலியார், கே. எஸ். இராசகோபால் முதலியார் ஆகியோர் தமது பாட்டனாரால் தொகுத்து வைக்கப்பட்ட பல அரிய ஆங்கில, தமிழ் நூல்களைத் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். இவை நூலகத்தில் அரிய நூல்கள் பகுதியில் பாதுகாக்கப்படும். இக் குடும்பத்தினருக்குப் பல்கலைக் கழகத்தின் நன்றி உரித்தாகும்.

தி.பத்மநாபன்,
நூலகம்.

## கல்வெட்டில் தெருப் பெயர்கள்

புதியனவாக அமைக்கப்படும் பெரியகுடியிருப்புக்களில் அமையும் சாலைகளான Main Street, Cross Street என்பவற்றை 'முதன்மைச் சாலை, குறுக்குச் சாலை என அழைக்கின்றனர். இஃது ஒரு பழங்கால அமைப்புமுறை.

பாண்டிய நாட்டில் வரகுணன் பெயரால் ஏற்படுத்தப் பெற்ற புதியதோர் ஊரில் அவ்வகைச் சாலைகட்கு நெடுந்தெரு, குறுந்தெரு என்ற பெயர் வைத்துள்ளனர். 'குறுந்தெருவும் நெடுந்தெருவும் குறித்த நாட்டி' என்பது கல்வெட்டுத் தொடர்.

– செ.இராசு,
கல்வெட்டியல் துறை.

## புதன் வட்ட நிகழ்ச்சிகள்

4.3.'86 – பேராசிரியர் சதாசிவம்: 'சுமேரிய திராவிட மொழி'.

26.3.'86 – திரு அருளி: 'வளிகள் - ஒரு சொல் விளக்கம்'.

## தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

### தமிழரின் ஒப்பனைக் கலைத் திறன்

வெ. வரதராசன்

தமிழரின் முருகியல் உணர்ச்சியையும் கலைத் திறனையும் இந்நூல் புலப்படுத்துகிறது. ஆடை, அணிகலன்கள், கூந்தல், நகம், முக ஒப்பனைகள், வண்ணப் பொருள்கள் முதலியன இலக்கிய மாந்தர் துணைகொண்டு விளக்கப் படுகின்றன.

திம்மி 1/8 பக்கங்கள்:185
விலை உரு.55/-

### குடற்புண்ணைக் குணப்படுத்தலாம் (மருத்துவச் சொற்பொழிவு)

டாக்டர் சு. நரேந்திரன்

பெரும்பாலோர் அறிந்த நோய்களில் குடற்புண் முதன்மையானது. இதனைத் தற்காலிகமாக அல்லாமல் முழுமையாகக் குணப்படுத்த முடியும் என இயற்கை முறைகளை இந்நூலில் ஆசிரியர் காட்டுகிறார். அரிய கருத்துக்கள்; எளிய நடை; எவரும் கைக்கொள்ளத்தக்க வழி முறைகள்.

திம்மி 1/8 பக்கங்கள்:34 விலை உரு.5/-

### செழியதரையன் பிரபந்தங்கள்

பொதுப் பதிப்பாசிரியர்: மு. சண்முகம்பிள்ளை
குறிப்புரை: பா. வெ. நாகராசன்

சின்னசேலம் குறுநில மன்னர் நால்வரைப் பற்றிப் புலவர்கள் பாடிய அறு நூல்களின் தொகுப்பே இந்நூல். பெருமிதமான நடையில் இன்பச் சுவையை முதன்மையாக வழங்குகிறது. புராணச் செய்திகளும் உள்ளன. கற்பனை நயம் மிக்கது.

திம்மி 1/8 பக்கங்கள்:638
விலை உரு.107/-

### மனிதனும் மரபியலும் (மருத்துவச் சொற்பொழிவு)

டாக்டர் ஞா. இராசராசேசுவரி

வாழையடி வாழையாக மரபு உரிமைகளைச் சந்ததிகள் எவ்வாறு பெறுகின்றன? அவற்றால் ஏற்படும் மாற்றங்கள், விளைவுகள் யாவை? இவ்வினாக்களுக்கு இந்நூல் விடை அளிக்கிறது. இதனால் மரபியல் நோய்களைக் களையலாம்; பண்பாட்டை வளர்க்கலாம்.

திம்மி 1/8 பக்கங்கள்:68
விலை உரு.7.50

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.